





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# திருப்பள்ளியெழுச்சி

*thiruppaLLiyezhuchchi*

# திருப்பள்ளியெழுச்சி

தனியன்

**ஸ்ரீ திருமலை ஆண்டான் அருளிச்செய்த**

तमेव मत्वा परवासुदेवं - रङ्गेशयं राजवदर्हणीयं ।
प्राबोधकीम् योकृत सूक्तिमालां - भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे ॥

**ஸ்ரீ திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச்செய்த**

மண்டங்குடியென்பர் மாமறையோர்
மன்னியசீர்த் தொண்டரடிப்பொடி தொன்னகரம்
வண்டு திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப்
பள்ளி உணர்த்தும் பிரானுதித்த வூர்

**ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த**

***கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்***
***கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்***
***மது விரிந்தொழுகின மாமலர் எல்லாம்***
***வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி***
***எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த***
***இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்***
***அதிர்தலில் அலை கடல் போன்றுளது எங்கும்***
***அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே*** [1] [0917]

கொழுங்கொடி முல்லையின் கொழு மலர் அணவிக்
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகு உதறி
விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ்வாய்
வெள்ளெயிறு உற அதன் விடத்தினுக்கனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [2] [0918]

# திருப்பள்ளியெழுச்சி

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ
பாயிருள் அகன்றது பைம் பொழில் கமுகின்
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடல் ஒளி திகழ் தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [3] [0919]

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தின சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவரேறே !
மா முனி வேள்வியைக் காத்து
அவபிரதம் ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே !
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [4] [0920]

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசை கனைகடல் அரவம்
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே [5] [0921]

இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி
புரவியோடாடலும் பாடலும் தேரும்
குமர தண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில் முன் இவரோ
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [6] [0922]

# திருப்பள்ளியெழுச்சி

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ
எம்பெருமான் உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [7] [0923]

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தில் நின்றகல்கின்றது இருள் போய்
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே [8] [0924]

*ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி*
*யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி*
*கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்*
*கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம்*
*மாதவர் வானவர் சாரணர் இயக்கர்*
*சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்*
*ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள*
*அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே* [9] [0925]

*கடி மலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ*
*கதிரவன் கனை கடல் முளைத்தனன் இவனோ*
*துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித்*
*துகில் உடுத்து ஏறினர் சூழ் புனல் அரங்கா*
*தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து*
*தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும் அடியனை*
*அளியன் என்றருளி உன் அடியார்க்கு ஆட்படுத்தாய் !*
*பள்ளி எழுந்தருளாயே* [10] [0926]